**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXV of Bharatiya Nagarik Suraksha Sanhita)**

**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, MADATHUKULAM**

| | |
|---|---|
| CC No. | : 94/2019 |
| Name | : Muthukumar |
| P.W. | : 8 |
| Father Name | : |
| Village | : |
| Taluk | : Madathukulam |
| Occupation | : |
| Age | : /2025 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 14.11.2025

**எதிரி நீதிமன்றத்தில் ஆஜர்**

**முதல் விசாரணை**

நான் தற்போது மோட்டார் வாகன ஆய்வாளர் நிலை 1 ஆக அரக்கோணத்தில் பணிபுரிகிறேன். கடந்த 2019 ம் ஆண்டு நான் உடுமலைப்பேட்டை வட்ட மோட்டார் வாகன ஆய்வாளராக பணிபுரிந்த போது 21.05.2019 கணியூர் காவல் நிலைய குற்ற எண். 87/2019 இதச பிரிவுகள் 279, 304(A) ன் படி பதிவு செய்யப்பட்ட வழக்கு சம்மந்தப்பட்ட விபத்து வாகனமான TN 58 AF 2023 என்ற Bajaj Discover இருசக்கர வாகனத்தை ஆய்வு செய்தேன். வாகனத்தில் கீழ்க்கண்ட சேதாரங்கள் காணப்பட்டது.

1. handle bar வளைந்திருந்தது

2. முகப்பு விளக்கு மற்றும் முன் நெம்பர் பிளேட் உடைந்திருந்தது

3. முன் பக்க மட்கார்டு வளைந்திருந்தது

வாகனம் இயக்க முடியாத நிலையில் இருந்ததால் தடை திறன் சோதிக்க இயலவில்லை. இவ்வாகன விபத்து எவ்வித இயந்திர கோளாரினால் ஏற்படவில்லை என்று சான்றளிக்கப்பட்டது. **வாகனத்தின் மோட்டார் வாகன ஆய்வறிக்கை அ.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** இது சம்மந்தமாக போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

(1) விபத்து சம்மந்தமாக போலீசார் என்னை 10.06.2019 ம் தேதி என்னை விசாரணை செய்தார்கள். விபத்து 21.05.2019 ம் தேதி நடைபெற்றதாக எனக்கு வேண்டுகோள் கடிதம் கொடுக்கப்பட்டது. விபத்து நடந்து 19 நாட்கள் கழித்து தான் வாகனத்தை ஆய்வு செய்தேன் என்றால் சரிதான். விபத்து நடந்த இடத்தில் வைத்து வாகனத்தை ஆய்வு செய்யவில்லை என்றால் சரிதான். மாண்பமை உச்சநீதிமன்ற வழிகாட்டுதலின் படி விபத்து நடந்த இடத்தில் சென்று ஆய்வு செய்ய வேண்டும் என்றால் சரிதான் நான் விபத்து நடந்த இடத்தில் ஆய்வு செய்யவில்லை. வாகனம் கீழே விழுந்தால் இந்த சேதங்கள் ஏற்பட வாய்ப்புள்ளது என்றால் சரிதான்.

மறு விசாரணை இல்லை.

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது..

DHEENADHAYALAN M

Digitally signed by DHEENADHAYALAN M
Date: 2025.11.14 17:52:35 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்
மடத்துக்குளம்